# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
தரம் : 11

**குடியுரிமைக் கல்வி** - I & II
පුරවැසි අධ්‍යාපනය - I & II

நேரம்: 3 மணித்தியாலம்

* இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டது.
* ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளிக்குக.

---

1. பிரதிநிதித்துவ ஜனநாயக நடைமுறையில் உள்ள நாடுகளில் ஆட்சி நடவடிக்கைகளில் வாக்காளரின் கருத்துக்களை நேரடியாக பெறக்கூடிய ஒரு முறையாவது
   1.ஜனாதிபதித் தேர்தல் 2. பாராளுமன்றத் தேர்தல்
   3.உள்ளூராட்சி மன்றத்தேர்தல் 4. குடியொப்பம் கோரல்

2. உரிமைகளை அனுபவித்துக் கொண்டு அதனுடன் தொடர்பான கடமைகளை செய்து கொண்டு வாழ்கின்ற மக்கள் சமூகம்
   1.ஜனநாயக சனசமூகம் எனப்படும்
   2.கடமைகளையும் உரிமைகளையும் பாதுகாக்கின்ற சமூகம் எனப்படும்
   3.லிபரல்வாத சனசமூகம் எனப்படும்
   4.கூட்டமாக வாழும் சனசமூகம் எனப்படும்

3. ஏதாவது கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி அதிகாரம் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் ஒன்றுபட்ட கூட்டம்
   1.அரசியல் கட்சி எனப்படும் 2.கட்டுப்பாட்டுக்குழு எனப்படும்
   3.சிவில் சமூகம் எனப்படும் 4.எதிர்கட்சி எனப்படும்

4 .ஒருகட்சி ஆட்சியுள்ள நாடுகளுக்கு உதாரணம் காட்டக்கூடிய நாடுகள் அடங்கிய விடை எது?
   1.பிரித்தானியா,அமெரிக்கா,கியுபா 2.கியுபா,வடகொரியா,சீனா
   3.சீனா,வடகொரிய,அமெரிக்கா 4.பிரித்தானியா,கியுபா,சீனா

5. மனிதனாக கௌரவத்துடன் சமூகத்தில் வாழ்வதற்கு அவனுக்கு கிடைக்கின்ற உரிமை
   1.அடிப்படை உரிமை 2.மனித உரிமை 3.சிவில் உரிமை 4.சமூக உரிமை

6. மக்களின் கஷ்டங்களை அரச கட்சியின் கவனத்தை ஈர்ப்பதற்கு
   1. கட்டுப்படுத்தல் குழுவால் செய்ய வேண்டிய செயலாகும்
   2. சிவில் சமூகத்தால் செய்ய வேண்டிய செயலாகும்
   3. சுதந்திர ஊடகத்தினால் செய்ய வேண்டிய செயலாகும்
   4. ஆசியல கட்சிகளின் செயலாகும்

7. நாட்டின் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்துக் கொண்டு பொதுமக்களின் பொதுக் கொள்கையை அடைவதற்கு செயற்படுத்துவது
   1.பாராளுமன்றம் 2.நிருவாகத்துறை 3.நீதிமன்றம் 4.அரசாங்கம்

8. தேசிய அரசுகள் தோற்றம் பெறுவதற்கு செல்வாக்குச் செலுத்தியது இவற்றில் எதுவாகும்
   1.செல்வந்த பொருளாதார அமைப்பு வீழ்ச்சியடைதல்
   2.முன்னேராத பொருளாதார நிலை
   3.தேசிய ஒருமை
   4.குடியேற்றவாதம்

9. ஜனாதிபதி ஆட்சி முறையில் காணக்கூடிய விஷேட இலட்சணம் இவற்றில் எது?
   1.பாராளுமன்றத்தில் இருந்து நிர்வாகத்துறை தெரிவு செய்யப்படல்
   2.நிருவாகத்துறை பாராளுமன்றத்துக்கு நேரடியாக வகைகூற முடியாதிருத்தல்
   3.சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் நேரடித் தொடர்பை காண முடியும்
   4.நிறைவேற்றுத்துறையை நீக்குவதற்கு சட்டத்துறைக்கு முடியுமாயிருத்தல்

10. மத்திய அரசாங்கத்திற்குரிய அதிகாரம் குறிப்பிட்டளவு பிரதேச ஆட்சி அலகுகளிடம் ஒப்படைத்தல்
   1. அதிகாரம் பண்முகப்படுத்தல் எனப்படும்
   2. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படல் எனப்படும்
   3. அதிகாரம் பகிர்ந்து வேறுபடுத்தப்படல் எனப்படும்
   4. அதிகாரம் வேறாக்கம் செய்யப்படல் எனப்படும்

11. சமஷ்டி அரசென்றின் வெற்றிகரமான நிலைப்பாட்டிற்கு இருக்க வேண்டிய குணாம்சம்.
   1. இரண்டாம் சபையொன்றிருத்தல்   2. அரசியல் யாப்பு எழுதப்பட்டிருத்தல்
   3. சகல இனக்குழுக்களும் தேசிய உணர்வுடன் செயற்படல்
   4. யாப்பு செயற்படுத்தும் அதிகாரம் நீதி மன்றத்திற்கு ஒப்படைத்தல்

12. பின்வரும் அதிகாரங்களில் மத்திய அரசுக்கு உரிய அதிகாரத்தை கொண்ட விடையாவது?
   A வெளி நாட்டு விவகாரம்   B தேசிய வீடமைப்பும் கட்டுமானமும்
   C தேசிய பாதுகாப்பு திட்டமிடல்   C சமூக சேவையும் புனர்நிர்மாணமும்
   1. A,B   2. B,C   3. A,C   4.C,D

13. மத்திய அரசின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கும் செயற்திறன்மிக்க மக்கள் சேவைகளை வழங்குவதற்கும் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள நிறுவன தொகுதியாவது.
   1. மாகாண சபை   2. உள்ளூராட்சி மன்றங்கள்
   3.பாராளுமன்றம்   4. அரச சேவை ஆணைக்குழு

14. தற்காலத்தில் சமூக நியாயத்தை கட்டியெழுப்புவதால் வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்தும் காரணியாவது.
   1.அரசாட்சி செயற்திறன்   2.அதிகாரிகளின் வாதம்
   3.இலஞ்சமும் ஊழலும்   4.தன்னிச்சையாக செயற்படல்

15. நல்லாட்சியில் காணக்கூடிய அடிப்படை குணம்சம் ஒன்று அடங்கிய விடையை தெரிவு செய்க.
   1.ஊழல் நிறைந்த அரச நிர்வாகம்
   2.சட்டத்தின் அதிகாரம்
   3.அரச ஆட்சி அதிகாரம் செயற்படும் போதுநபர்கள் மக்களுக்கு வகைகூற கடமைப்பட்டிருத்தல்
   4.நீதி நியாயமின்றி நடவடிக்கை எடுத்தல்

16. பன்மைப் பண்பாட்டுச் சமூகமொன்றின் மக்கள் ஒருமைப்பாட்டுடன் செயற்படுவதால்
   1.அந்நிய சமயம் அல்லது பண்பாட்டவர்களுக்கு கௌரவம் அளிக்கும் முறையில் நடக்கப் பழகுதல்.
   2.மனித சுதந்திரம் இழக்கப்படல்
   3.ஜனநாயகம் நிலைநாட்டப்படல்
   4.மோதல் அதிகரித்தல்

17. எந்தவொரு பொருளாதார முறைக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற பிரச்சினை
   1.பொருளாதார பிரச்சினை   2.அடிப்படை பொருளாதார பிரச்சினை
   3.அடிப்படை சமூகப் பிரச்சினை   4.அடிப்படை அரசியல் பிரச்சினை

18. பொருளாதாரம் ஒன்றில் நடைபெறும் செயற்பாடுகளை சரியாகக் குறிக்கும் விடை.
   1.தயாரிப்பு, பங்கீடு செய்தல், நுகர்வு   2.உற்பத்தி, பங்கீடு செய்தல், விற்பனை செய்தல்
   3.உற்பத்தி, வியாபாரம், நுகர்வு   4.உற்பத்தி, பங்கீடு, நுகர்வு

- பின்வருவனவற்றை வாசித்து 19,20 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
   A. ஆடை அணிகள்   B. பசளை   C. மருந்துகள்   D. வீட்டு உபகரணம்
   E. மரப்பலகை   F. உணவுப்பண்டங்கள்

19. மேலே காட்டப்பட்டுள்ளவற்றில் நுகர்வு பொருட்கள் மட்டும் அடங்கும் விடைத் தொகுதி.
   1.A,B,C   2. B,C,D   3.A,C,F   4.C,D,F

20. மேலே காட்டப்பட்டுள்ளவற்றில் இடைநிலைப் பொருட்கள் மட்டும் அடங்கும் விடைத் தொகுதி.
1.ABC   2. BDE   3.BDF   4.CDF

21. நிலையான அபிவிருத்தியில் உள்ளடங்கும் விடயமாக இருப்பது.
1. மக்களின் தலையீட்டை குறைத்தல்
2. தமது பண்பாட்டிற்குமட்டும் கௌரவம் அளித்தல்
3. எதிர்கால சந்ததியினருடன் தொடர்பினை குறைத்தல்
4. அந்நிய பண்பாட்டினருக்கு கௌரவம் அளித்தல்

22. சர்வதேச மோதல்கள் ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணியாவது.
1.வளம், பொருளாதார பிரதிபலன், ஆதிக்கப்பரம்பல்
2.மற்றவர்களின் கருத்துக்களை கௌரவிக்காமை, அந்நிய கருத்துக்களை சகிக்காமை
3.அந்நிய பண்பாட்டினை கவனியாது விடலும், அந்நிய கருத்துக்களை ஏற்காமையும்
4.அந்நிய சமயங்களை ஏற்காமையும்,அவற்றிற்கு மதிப்பளிக்காமையும்

23. கலந்துரையாடல் முறையின்இலட்சனங்கள் அடங்கிய விடைத் தொகுதியை தெரிவு செய்க.
1.அதிக செலவு கூடிய முறையாகும்
2.முறையான அமைப்பென்றாக இருத்தல்
3.தீர்வு காலம்தாழ்த்தி கிடைத்தல்
4.தனிப்பட்ட முறையிலும் நம்பிக்கையான மட்டத்திலும் தீர்க்கப்படல்

24. உடன்பாட்டின் மூலம் தீர்க்கும் முறை அதிகமாக பயன்படுத்தப்படுவது.
1.தொழிலாளர், கைத்தொழில் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக.
2.குடும்ப முரண்பாடுகளும் தொழிலாளர் தொழில்தருநர் மோதலும்
3.நாட்டிலும் நாடுகளுக்கிடையிலும் ஏற்படும் மோதல்களை தீர்ப்பதற்கு.
4.நிருவனங்களுக்கிடையிலான மோதல்களை தவிர்ப்பதற்காக.

25. மோதல்களை தீர்க்கும் போது நபரிடம் இருக்க வேண்டிய சமூக குணம்சமாவது.
1.கருணை   2.சிறந்த தொடர்பு   3.பொறுமை   4.செவிமடுத்தல்

26. சட்டம் என்பது அரசினால் செயற்படுத்தப்படுகின்ற உரிமைகள் மற்றும் உரிமை பற்றிய ஒரு தொகுதியாகும் என்று கூறியவர்.
1.ஜோன் ஒஸ்டின் 2.ஜோன் லொக்   3.T.H. கிறீன்   4.G.D.H.கோல்

27. சட்டத்தின் மூலாதாரம் ஒன்றில் அடங்கிய விடையைத் தெரிவு செய்க
A. பல்வேறு கட்டளைச் சட்டங்கள்   B. முன்மாதிரியான கருத்துக்கள்
C. ஒழுக்கச் சட்டக் கோவை   D. நீதி மன்றத் தீர்ப்புக்கள்
1. AB   2. AD   3. CD   4. BD

28. நீதிச் சேவை ஆணைக்குழுவின் தீர்ப்பினை விமர்சிக்கக்கூடிய அதிகாரம் இருப்பது.
1. உயர் நீதி மன்றம்   2. மேன்முறையீட்டு நீதி மன்றம்
3. மேல் நீதி மன்றம்   4. மாகாண மேல் நீதி மன்றம்

29. நிர்வாக பரிபாலன நடவடிக்கையால் பிரஜைகளின் அடிப்படை மனித உரிமைகள், ஏனைய உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைப் பாதுகாத்தல் தொடர்பாக அரசு கொண்டு வந்துள்ள நடவடிக்கையாவது.
1. உயர் நீதி மன்றத்தில் முறையிடல்   2. மனித உரிமைகள் ஆணைக் குழுவினை நாடல்
3. ஒம்புட்ஸ்மன் உதவியை நாடல்   4. சர்வதேச நீதி மன்றத்திற்கு முறைப்பாடு செய்தல்

30. சட்டத்தின் இறைமை நிலைக்க பெற்றுள்ள சமூகத்தில் காணக்கூடிய இலட்சனமாவது.
1. சாதாரணமாகவும் காலதாமதமாகவும் நியாயத்தை வழங்குதல்.
2. சட்டத்திற்கு முன்னால் சகலரும் சமனற்ற நபர்களாக கருதுதல்.
3. சட்டத்தை அறியாமல் இருத்தல் குற்றத்திற்கு அதை காரணமாக கருதுதல்
4. சுயாதீனமான சட்டத் தொகுதி ஒன்று செயற்படல்

31. 1931 டொணமூர் அரசியல் யாப்பினால் கிடைத்த முன்னேற்றமான ஆலோசனையாக அமைவது.
1. இரு சபைகளை கொண்ட பாராளுமன்றம்
2. அரச சபை அமைக்கப்படல்
3. பிரதமரை முதல்வராகக் கொண்ட அமைச்சரவை அமைத்தல்
4. ஆளுனர் பதவியை ஏற்படுத்துதல்

32. 1978 இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் புதிய அம்சமாக இருப்பது.
    1. அரசாங்கச் சேவை ஆணைக்குழு அமைத்தல்
    2. அடிப்படை உரிமைகள் பகுதி சேர்க்கப்படல்
    3. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தல்
    4. பிரதமரைக் கொண்ட மந்திரி சபை அமைக்கப்படல்

- பின்வரும் கூற்றுக்களை வாசித்து 33,34 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
  A பயனுள்ள வாழ்க்கை தொழில் ஒன்றில் ஈடுபடல்
  B மோதல்களை ஏற்படுத்திக் கொள்வதில் இருந்து விலகி இருத்தல்
  C சுதந்திரம், சமத்துவம், உரிமைகள் என்பவற்றை பாதுகாத்தல்
  D சுதந்திர கருத்துக்களைபொருத்துக் கொள்ளளும் மதிப்பளித்தலும்
  E கலந்துறையாடல் முறையில் மோதல்களை தீர்த்துக் கொள்ளல்
  F அரச நலனோம்பு சேவைகளை பிழையாகப் பயன்படுத்துதல்

33. மேற்கூறிய கூற்றுக்களில் தேசியப் பாதுகாப்பை நிலைநாட்டிக் கொள்வதற்கு உதவும் முறையில் பிரஜை ஒருவரால் செயற்படுத்த வேண்டிய கடமைகள் அடங்கிய விடைத்தொகுதி.
    1. ABC    2. ACE    3. BDE    4. BDF

34. மேற்கூறிய கூற்றுக்களில் சமூக அபிவிருத்தியை கொண்டு நடாத்துவதற்கு பிரஜை ஒருவரால் செய்யப்பட வேண்டிய் கடமைகள் அடங்கிய விடைத்தொகுதி.
    1. ABC    2. ACF    3. BDE    4. BDF

35. மரணதண்டணையை தடைசெய்யும் நோக்காகக் கொண்டு குடியியல் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச உடன்பாட்டில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்.
    1. முதலாவது விருப்பிலான பின்னேடு என்றழைக்கப்படுகின்றது.
    2. இரண்டாவது விருப்பிலான பின்னேடு என்றழைக்கப்படுகின்றது.
    3. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாடு என்றழைக்கப்படுகின்றது.
    4. பொருளாதார சமூக கலாச்சார உரிமைகள் தொடர்பான உடன் தொடர்பாக ஏற்படுத்திய விருப்பிலான ஒப்பந்தம் என்றழைக்கப்படுகின்றது.

36. சிறுவர்கள் உரிமை தொடர்பான சமவாயம் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் அமங்கியுள்ள விடையை தெரிவு செய்க.
    1. விரும்பிய இடத்திற்கு செல்லும் உரிமை
    2. விரும்பிய நன்பர்களுடன் தொடர்பு கொள்ளும் சுதந்திரம்
    3. கருத்து வெளியிடும் சுகந்திரம்
    4. தனது கருத்துக்கேற்ப நடந்துக் கொள்ளும் சுதகந்திரம்

37. வேலை செய்யும் மக்களுக்காக சமூக சமத்துவம் நிலைநாட்டும் நோக்குடன் 1919 இல் தோற்றம் பெற்ற அமைப்பு.
    1. சர்வதேச தொழிலாளர் அமைப்பு.    2. சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு
    3. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்    4. சர்வதேச தொழிலாளர் உரிமைகள் பாதுகாப்பு நிறுவனம்

38. உலக அபிவிருத்திக்கு பிரதானமாவது
    1. சுற்றாடல்    2. மனிதன்    3. வளிமண்டலம்    4. நீர்க்கோலம்

39. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக இலங்கையில் செயற்படுகின்ற திணைக்களம்.
    1. சுற்றாடல் பாதுகாப்பு திணைக்களம்.    2. சமூத்திர சுற்றாடல் பாதுகாப்பு திணைக்களம்.
    3. சுரங்கமறுத்தல் திணைக்களம்    4. புவியியல் விஞ்ஞானம் திட்டமிடல் திணைக்களம்

40. குடும்ப வாழ்கை போன்றே தனிநபர் வாழ்கையும் நல்ல நிலையில் கட்டி எழுப்புவதற்கு உதவுகின்ற மிக முக்கியமான நிறுவனமாவது.
    1. பன்சலை    2. பாடசாலை    3. பல்கலைக்கழகம்    4. சமூகம்

(புள்ளி 40×1=40)

**குடியுரிமைக் கல்வியும் மக்களாட்சியும்** / පුරවැසි අධ්‍යාපනය Grade : 11

**பகுதி II**

- முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

01. 1. ஜனநாயகம் தொடர்பாக கருத்து வெளியிட்ட இரு சிந்தனையாளர்களைப் பெயரிடுக.
2. தற்கால அரசியல்முறையினுள் பாராளுமன்றத்தின் செல்வாக்குகள் இரண்டை குறிப்பிடுக.
3. ஒற்றையாட்சி நடைபெறுகின்ற நாடுகளுக்கு உதாரணம் இரண்டு தருக.
4. அதிகாரத்தின் பல்வேறு வகைகள் உண்டு அதில் இரண்டை குறிப்பிடுக.
5. இலங்கையில் பன்மை சமூகம் நிலவுவதற்கு ஏதுவான காரணிகள் இரண்டு தருக.
6. திறந்த பொருளாதாரத்தில் காணக்கூடிய பிரதான இலட்சனங்கள் இரண்டு தருக.
7. நாடொன்றில் உள்நாட்டு மோதல் இரு வகைகளையும் கூறுக.
8. சட்டத்தை செயற்படுத்தும் இரு பிரதானிகளும் யார்?
9. 1947 சோல்பரிக் யாப்பின் கீழ்அமைக்கப்பட்ட இரு சபைகளினதும் பெயர் என்ன?
10. கடமைகளை வகைப்படுத்தக் கூடிய பகுதிகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 16)

02. 1. நேரடி ஜனநாயகத்தை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் எழுகின்ற பிரச்சினைகள் இரண்டை எழுதுக (புள்ளி 2)
2. ஜனநாயக ஆட்சிமுறையொன்று வெற்றிப்பெறுவதற்கு எதிர்கட்சியினால் ஆற்றக்கூடிய செயல்கள் மூன்றை எழுதுக. (புள்ளி 3)
3. பிரஜைகள் தொடர்பான அரசியல் பொறுப்புக்கள் மூன்றினைக்கூறி ஒன்றை விளக்குக. (புள்ளி 5)

03. 1. பொருள் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பிரதான நுட்பமுறைகள் இரண்டை எழுதுக.(புள்ளி 2)
2. உற்பத்திக் காரணிகள் மூன்றைக் கூறுக. (புள்ளி 3)
3. தற்பொழுது நிலவுகின்ற அபிவிருத்தி செயற்பாட்டினால் இலங்கைக்கு கிடைக்கின்ற நன்மைகள் மூன்றை குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (புள்ளி 5)

04. 1. மனதில் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஈடுபடகூடிய இரண்டு அம்சங்களை தருக. (புள்ளி 2)
2. மோதல் ஏற்படுத்தும் மூலகங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (புள்ளி 3)
3. மோதல்களைத் தீர்க்கும் போது நடுநிலமையாளரிடம் இருக்க வேண்டிய முக்கிய குணாம்சங்கள் மூன்றை குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (புள்ளி 5)

05. 1. சட்டத்தின் குணாம்சங்கள் இரண்டை எழுதுக. (புள்ளி 2)
2. தேசிய சட்டத்தை வகுக்கக்கூடிய பிரதான மூன்று பகுதிகளை பெயரிடுக. (புள்ளி 3)
3. I. உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மூன்றை குறிப்பிடுக (புள்ளி 3)
II. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டை குறிப்பிடுக (புள்ளி 2)

06. 1. இலங்கையில் செயல்படும் உள்ளூராட்சி மன்றங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக. (புள்ளி 2)
2. இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற காரியங்களை பிரித்துக் காட்டக்கூடிய பிரதான தலைப்புக்கள் மூன்றையும் எழுதுக. (புள்ளி 3)
3. மாகாண சபைகளினாலும் உள்ளூராட்சி சபைகளினாலும் கிடைக்குப் பயன்கள் மூன்றை குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (புள்ளி 5)

07. 1. பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)
2. சிறுவர் உரிமை சம்மேளனம் அமைக்கும் போது, சிறுவரி பற்றிய விஷேட கவனம் செலுத்திய முக்கிய காரணிகள் மூன்றை எழுதுக. (புள்ளி 3)
3. I. பிரஜைகளுக்கு இருக்கின்ற சிவில் உரிமைகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)
II. பிரஜைகளுக்கு இருக்கின்ற அரசியல் உரிமைகள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)